**20.12.2021**

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.32454/2021/அம்ரூத்–2, நாள்.17.12.2021 –இன்படி, திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15வது மத்திய நிதி ஆணையம் – தேசிய நலவாழ்வு இயக்கம் – 2021–22 திட்டத்தின் கீழ் ரூ.50.00 இலட்சம் (25+25) மதிப்பீட்டில் இரண்டு இடங்களில் "நகர்புற சுகாதார நல்வாழ்வு மையம்" (Urban Health and Wellness Center – UHWC) அமைக்க அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. இதன்படி கீழ்கண்ட இரு இடங்களில் நகர்புற சுகாதார மற்றும் நல்வாழ்வு மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது:-

| வ.எண் | நகர்புற சுகாதார நல்வாழ்வு மையம் அமைக்கப்பட உள்ள இடம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, நெசவாளர் காலனி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் "நகர்புற சுகாதார நல்வாழ்வு மையம்" அமைக்கும் பணி | ரூ.25.00 இலட்சம் |
| 2 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, கொல்லப்பட்டி ஹவுசிங் யூனிட் பகுதியில் "நகர்புற சுகாதார நல்வாழ்வு மையம்" அமைக்கும் பணி | ரூ.25.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.50.00 இலட்சம்** |

மேற்கண்ட இரு இடங்களில் ரூ.50.00 இலட்சம் (25+25) மொத்த மதிப்பீட்டில் 15வது மத்திய நிதி ஆணையம் மற்றும் தேசிய நலவாழ்வு இயக்கம் 2021–22 திட்டத்தின் கீழ் " நகர்புற சுகாதார நல்வாழ்வு மையம் " (UHWC) அமைக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.8796/2021/இ1)**

**பொருள் எண்.2**

கீழ்க்கண்ட பணிக்கு அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.10.2021–இல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் ரூ.60.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் நகராட்சி நிர்வாக தலைமைப்பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.686/2021/DO1, நாள்.20.11.2021–ல் தொழில்நுட்ப அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 16.12.2021 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு செய்யப்பட்டு 17.12.2021 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் % | விலைகுறைப்பு கேட்பு கடிதத்திற்கு பின் குறைக்கப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, (Ward-D, Block no.36) கொல்லப்பட்டி பூங்காவை மேம்படுத்துதல் | ரூ. 60.00 இலட்சம் | 1. Thiru.K.Pulliappan Mallasamudram<br>2.Thiru.P.Sivaperumal Selam. | (+)4.92 % அதிகம்<br>(+) 5.28 % அதிகம் | (+)4.70 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள Thiru.K.Pulliappan, Mallasamudram ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கடிதம் கோரப்பட்டத்தில் தனது ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (+)4.92% கொடுத்துள்ளதில் இருந்து 0.22% விலைக்குறைப்பு செய்து இறுதியாக மதிப்பீட்டை விட (+)4.70% அதிகம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (+)4.70% கூடுதலாக கொடுத்துள்ள Thiru.K.Pulliappan, Mallasamudram அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டிற்கான செலவினத்தை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் ஒதுக்கப்படும் நிதிலிருந்தும், கூடுதல் செலவினமான (+)4.70% -னை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6818/2021/இ1)**

**பொருள் எண்.3**

அரசாணை எண்.71, நாள்.13.09.2021, நகராட்சி குடிநீர் வழங்கல் துறை – இன்படி திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, கூட்டப்பள்ளி பிருந்தாவன் நகர் – முதல் குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால் நமக்கு நாமே திட்டம் 2021–22–இன் கீழ் மேற்கொள்ள ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டது. மேலும் ஊர்பொதுமக்கள் பங்களிப்பாக மொத்த மதிப்பீட்டில் ஒரு பங்குத் தொகையாக ரூ.3.00 இலட்சம் நகராட்சி கருவூலத்தில் 13.12.2021 அன்று செலுத்திய விவரம் பின்வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மூன்றில் ஒரு பங்குத்தொகை | பங்களிப்பு செலுத்திய விவரம் |
|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.11, கூட்டப்பள்ளி பிருந்தாவன் நகர் – முதல் குறுக்குத்தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (Unicode:054011R285) | ரூ.9.00 இலட்சம் | ரூ.3.00 இலட்சம் | 13.12.2021 அன்று நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். (ரசீது எண்.054/01/1/ 21–22/0019757, நாள்.13.12.2021) |

எனவே, மேற்கண்ட பணியை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–2022–ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கக் கோரி திட்ட பிரேரணைகள் மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் வழி அனுப்பி அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.8624/2021/இ1)**

**பொருள் எண்.4**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு சி, பிளாக்–12, நகரளவு எண்–7/4, 7,6–ல் அமைந்துள்ள 0.75 ஏக்கர் பரப்பளவு இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவாக அமைப்பதற்கு ஒப்புதல் வேண்டி நாமக்கல், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலமாக விண்ணப்பம் செய்யப்பட்டது. அதன்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு ந.க.எண்.1453/2021/நா.மா, நாள்.18.11.2021 கடிதத்தில் தெருவித்துள்ளபடி சாலை, வடிகால், மின்வசதிகள் அமைக்கும் பணிகளை மனுதாரர் திரு.பி.ராமலிங்கம் க/பெ எஸ்.பாலசுப்பிரமணியம் என்பவர், மேற்கொண்டு நகராட்சிக்கு தானமாக கொடுக்க வேண்டிய பொது உபயோக 280 ச.மீ இடத்தையும் சாலை வசதிக்கு 307.31 ச.மீ இடத்தையும் 16.07.2021 –ல் பத்திர ஆவண எண்.4496, நாள்.16.07.2021–ல் நகராட்சி ஆணையர் பெயரில் பிரிவு செய்து கொடுத்துள்ளார். மேற்காணும் சாலை, வடிகால் வசதிகள், மின்வசதிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 13.08.2021–ல் அறிக்கை செய்துள்ளதன் பேரில், மேற்காணும் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் கோரி, நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.4381/2021/எப்1, நாள்.28.09.2011 கடிதத்தின் மூலமாக கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண்.1453/2021/நா.மா, நாள்.18.11.2021 கடிதத்தின்படி சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் நகரமைப்பு ஆய்வாளரின் 13.12.2021–ம் தேதிய அறிக்கையின்படி, மனுதாரர் மனைப்பிரிவுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.29,500/– செலுத்த அறிக்கை சமர்பித்துள்ளார். மேற்காணும் தொகையை மனுதாரர் நகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின்னர் மனுதாரருக்கு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

நாமக்கல், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு ந.க.எண்.1453/2021/நா.மா, நாள்.18.11.2021 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி நிபந்தனைக்குட்பட்டு மனுதாரருக்கு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(கோப்பு எண். 4381 /2021/எப்1)**

**<u>பொருள் எண்.5</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை புற ஆதார முறையில் தூய்மை செய்யும் பணிக்கு தனியார் ஒப்பந்ததாரரான திரு.K.குமார், அவர்கள் மூலம் **105** தூய்மை பணியாளர்களை ஈடுபடுத்த ஒப்பந்தம் செய்து **23.12.2020** அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்காணும் ஒப்பந்ததாரர் திரு.K.குமார் அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்த காலம் **31.12.2021** முதல் முடிவடைவதால் நகர் பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணி தொய்வில்லாமல் நடைபெறவும் பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி திரு.K.குமார், ஒப்பந்ததாரர் மூலம் தற்போது பணிபுரிந்து வரும் **105** தூய்மை பணியாளர்களை தூய்மை பணிக்கு ஈடுபடுத்த மேலும் **3** மாதங்கள் **01.01.2022** முதல் **31.03.2022** வரை ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து **23.12.2020**–ல் வழங்கிய பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் இந்த **3** மாத காலத்திற்குள்ளாக நிர்வாகஅனுமதி வரப்பெற்று புதிய ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டால் இந்த ஒப்பந்த நீட்டிப்பு எவ்வித அறிவிப்புமின்றி முடிவடையும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படுத்தி பணி உத்தரவு வழங்கவும் இம்மூன்று மாத காலத்திற்கு மேற்காணும் பணியாளர்களுக்கு ஏற்கனவே பெற்றுவரும் ஊதியம் நாள்ளொன்றுக்கு நபர் ஒன்றிற்க்கு ரூ**517.70/–** வீதம் **3** மாத காலத்திற்கான உத்தேச செலவினம் ரூ.**51.00** லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் 3 கருதி திரு.K.குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்தினை நிபந்தனைகளுக்கு உட்படுத்தி **01.01.2022** முதல் **31.03.2022** வரை ஒப்பந்த நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொதுநிதி மற்றும் SUC நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண். 10838 /2021/எச்1)**